# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.88 /2015

Deposition of Witness for Prosecution PW-8

Father's Name :திரு. இளங்கோவன்
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of Sep– 2019.

முதல் விசாரணை:-

நான் தற்போது கன்னங்குறிச்சி காவல் நிலையத்தில தலைமை காவலராக பணிபுரிகிறேன். வழக்கு சம்பவ காலத்தில் அதே காவல் நிலையத்தில் பணிபுரிந்தேன். 19-10-2013 அன்று கன்னங்குறிச்சி காவல் சரகத்திற்குட்பட்ட பாலாஜி நகரிலிருந்து மேற்படி காவல் நிலைய குற்ற எண் 261/2013 வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்த ராஜசேகரன் என்பவரின் பிரேதத்தை ஆய்வாளரின் உத்தரவின்படி எடுத்து சென்று சேலம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு பிற்பகல் 3-45 மணியளவில் விபத்து பதிவேட்டில் பதிவு செய்து பிரேத பரிசோதனைக்காக ஒப்படைத்தேன். பின்னர் ஆய்வாளர் கொடுத்த பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோளை ஒப்படைத்தேன். பின்னர் மறுநாள் 20 ம் தேதி பிரேத பரிசோதனை முடிந்து பிரேதத்தை ஒப்படைக்க பார்த்த போது அவரது அம்மா அதே மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் இருந்ததால் ஆய்வாளரின் அனுமதியுடன் மீண்டும் பிரேதத்தை சவக்கிடங்கில் ஒப்படைத்தேன். பின்னர் பிரேதத்தில் இருந்த முக்கால் டிராயர் வெள்ளை நிறமுள்ளதை மருத்துவமனையிலிருந்து பெற்று தனி அறிக்கையுடன் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். அதனை ஆய்வாளர் படிவம் 95 மூலம் பெற்றுக்கொண்டார். அதில் இரத்தக்கறை படிந்திருந்தது. என்னால் கொடுக்கப்பட்ட தனி

அறிக்கை அ.சாஆ 16. பின்னர் பிரேதத்தின் உடல் உள் உறுப்புகளை பெற்று இரசாயன பகுப்பாய்விற்காக சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில்)

பிரேத விசாரணை ஆய்வாளரால் சேலம்அரசு மருத்துவமனையில் வைத்து 19-10-2013 அன்று இரவு 8 மணியளவில் செய்தார். நான் சம்பவ இடத்திற்கு சென்ற சமயத்தில் பொது மக்கள் நிறைய பேர்இருந்தார்கள்.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Elangovan Sd/- III ADJ Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.88/2015

Deposition of Witness for Prosecution PW-9

Father's Name :திருமதி. விஜயா
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of Sep– 2019.

முதல் விசாரணை:-

நான் சேலம் கன்னங்குறிச்சி இராமசாமி நகரில் குடியிருக்கிறேன்.கொத்து வேலை செய்கிறேன். 5, 6 வருடங்களுக்கு முன்பு இறந்த ராமகிருஷ்ணனிடம் வேலைசெய்தார். என்னுடன் மேஸ்திரி கோவிந்தராஜ், சேட்டு அகியோரும் வேலைக்கு வந்திருந்தார்கள். காலை 9 மணிக்கு வேலைக்குசென்று வழக்கமாக மாலை 5 மணிக்கு வீட்டிற்கு திரும்பி விடுவோம். அதன்படி ஒரு நாள் வேலைக்குசென்றிருந்த சமயத்தில் மேஸ்திரி கட்டிடத்தின் உரிமையாளரான ராமகிருஷ்ணன் வீட்டிற்கு சாப்பாட்டிற்கு பணம் வாங்க சென்றவர் சத்தம் போட்டுக்கொண்டு ஓடி வந்தார். ஓனர் வீட்டில் ஒரே ரத்தமாக கிடக்கிறது என்று சொல்லிக்கொண்டு மேஸ்திரி கோவிந்தராஜ் சொல்லி கொண்டு வந்த பின்னர் அங்கு வேலை செய்த அனைவரும் ஓனர் வீட்டிற்கு போய் பார்த்தோம். அங்கு அவர் வீட்டில் ரத்தமாக கிடந்தது. வீட்டிற்குள் எட்டி பார்க்க பயமாக இருந்ததால் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். அதன்பின்னர் ஆம்புலன்ஸ் வந்தது போய் பார்த்தோம்., பின்னர் ஆம்புலன்ஸில் ரத்தக்காயத்துடன் கிடந்த ராஜாத்தி அம்மாளை ஏற்றி மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பின்னர் போலிசார் அங்கு வந்து விட்டார்கள். நாங்கள் போய் விட்டோம். இரண்டு நாட்கள் கழித்து போலிசார் விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில்)

ராமகிருஷ்ணன் குடியிருந்த வீட்டின் பின்புறத்தில் நாங்கள் கொத்து வேலை செய்தோம். நாங்கள்வேலைசெய்த வீட்டிலிருந்து ராமகிருஷ்ணன் குடியிருந்த வீட்டிற்கு வருவதற்கு வழி இருக்கிறது. அன்றைக்கு அன்று ராமகிருஷ்ணன் செய்யவேண்டிய வேலைகளை மேஸ்திரியிடம் சொல்வாரா என்றால்அது எனக்கு தெரியாது. சம்பவதேதியில் பூச்சு மற்றும் செங்கல் வேலைக்காக மேற்படி கட்டிடத்திற்கு வேலைக்கு சென்றோம். அன்றைய தினம் பகல் 11 மணிவரை கட்டிட வேலை செய்தோம். கோவிந்தராஜ் சத்தம் போட்டுகொண்டு வந்தவுடன் அக்கம் பக்கத்தினர் கூடி விட்டார்கள். கோவிந்தராஜ் சத்தம்போட்டுகொண்டு வந்த பின்னர் சுமார் முக்கால் மணி நேரத்தில் போலிசார் அங்கு வந்தார்கள். போலிசார் வந்தபின்னர்தான் காயத்துடன் கிடந்த ராஜாத்தியை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ராமகிருஷ்ணன் வீட்டிற்குள் கிடந்த பிரேதத்தை எத்தனை மணிக்கு எடுத்தார்கள் என்பது எனக்கு தெரியாது. ராமகிருஷ்ணன் வீட்டிற்குள் யார் யார் எந்த இடத்தில் இறந்து கிடந்தார்கள் என்பதை நான் வீட்டிற்குள் போய் பார்க்கவில்லை. ராமகிருஷ்ணன் குடியிருந்த வீட்டிற்கு தனி கேட் இருக்கிறது. அந்த வீட்டின் மாடியில் வாடகைக்கு ஆட்கள் குடியிருக்கிறார்களா என்பது தெரியாது. எத்தனை மணிக்கு ராமகிருஷ்ணன் வீட்டிற்குள் இருவர் இறந்து கிடந்தார்கள் என்பது எனக்கு தெரியாது. காலை 8 மணிக்கே ராமகிருஷ்ணன் வீட்டில் இறந்து கிடந்தவர்கள் பற்றி தகவல் தெரிந்து விட்டதாகவும் அதனை மறைத்து 9 மணிக்கு வேலைக்கு வந்து 11-00 மணி வரை வேலை பார்த்ததாகவும்அதன்பின்னர் தான் ராமகிருஷ்ணன் வீட்டில் இறந்து கிடந்த விபரம் எங்களுக்குதெரிய வந்ததாகவும் பொய்யாக சொல்கிறேன் என்பது சரியல்ல.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Vijaya Sd/- III ADJ Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.43 /2017

Deposition of Witness for Prosecution PW-1

Father's Name :திருமதி. குப்பாயி
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of September– 2019.

முதல் விசாரணை:-

நான் தற்போது சேலம் திருமலைகிரி மொட்டையன் தெருவில் குடியிருக்கிறேன். இறந்த சென்னிமலை எனது மகன். எதிரிகளை தெரியும். எதிரிகள் மூவரும் என் மகன்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எங்கள் நிலம் ஒன்றை விற்பனை செய்தோம். அதில் கிடைத்த பணத்தை வாங்கிய சமயத்தில் எனது மகன் சென்னிமலை தனது பங்கு பணத்தை கொடுக்குமாறுகேட்டு வாங்கி கொண்டு வீட்டிற்கு போனார். நான் என் பிறந்த ஊரான மல்லூருக்கு வாங்கிய கடன்களை கொடுப்பதற்காக போனேன். என்னுடன் மல்லூருக்கு எதிரிகளும் வந்தார்கள். பின்னர் என் மகன் சென்னிமலை இறந்து விட்டதாக சொல்லி என்னை மல்லூரிலிருந்து மொட்டையன் தெருவில் உள்ள எனது வீட்டிற்கு கூட்டி வந்தார்கள். என் மகன் சென்னிமலை எவ்வாறு இறந்தான் என்பது எனக்கு தெரியாது. நான் போலிசில் புகார் எதுவும்கொடுக்கவில்லை. என்னை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்ற போது ஒரு பேப்பரில் ரேகை மட்டும் வாங்கிகொண்டார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என்பது எனக்குதெரியாது. என்னிடம் காட்டப்படம் புகாரிலுள்ள ரேகை என்னுடையதுதான். சாட்சியின் அந்த ரேகை மட்டும் அ.சா.ஆ.1. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. என்

கணவர் இறந்து விட்டார்.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரியதால் அவ்வாறே அனுமதிக்கப்பட்டது. )

அ.த.வ.கு.வி.

கடந்த 4-1-2016 ம்தேதியன்று எங்களுக்கு சொந்தமான 16 செண்ட் நிலத்தை விற்க முடிவு செய்து திருமலைகிரியை சேர்ந்த செங்கோடன் மகன் தங்கராஜ் என்பவருக்கு ரூ 18 லட்சத்திற்கு விலைபேசி விற்று விட்டு மேற்படி பணத்தை என் நான்கு மகன்களுக்கும்தலா ரூ 3.90 லட்சம் கொடுத்து விட்டுமீதி பணத்தை தான் எடுத்துக்கொண்டதாகவும்,அதில் கிடைத்த பணத்தில் தனது மகன்கள் ஈஸ்வரன், சந்திரன், பழனியப்பன் ஆகியோர் ஏற்கனவே தறி மிசின் வாங்கிய கடனை கொடுத்துஅடைத்து விட்டதாகவும் 2 வது மகன் சென்னிமலை மட்டும் தனது பங்குதொகையை வைத்திருந்ததாகவும் பத்திரபதிவு முடிவுந்து தாங்கள் எல்லோரும் வீட்டிற்கு வந்ததாகவும் இரவு 10 மணியளவில் தானும் மகன்கள் சென்னிமலை, சந்திரன், பழனியப்பன் ஆகியோர் வீட்டிலிருந்த போது மூத்த மகன் ஈஸ்வரன் வீட்டிற்கு வந்ததாகவும் அப்போது தன் மகன் சென்னிமலையிடம் மற்ற மூன்று மகன்களும் பணம் கேட்டு தொந்தரவு செய்ததாகவும், சென்னிமலை அதற்கு மறுத்ததாகவும், அதனால் சென்னிமலைக்கும் மற்ற மூன்று மகன்களுக்கும் வாய் தகராறு ஆகி மூவரும் சென்னிமலைமயை கீழே தள்ளியதாகவும், அப்போதுகீழே கிடந்தசென்னிமலையை பழனியப்பன் பிடித்துக் கொள்ள பக்கத்தில் கிடந்த டி வி. கேபிள் ஒயரை ஈஸ்வரனும், சந்திரனும், எடுத்து சென்னிமலை கழுத்தில் சுற்றி இறுக்கி பணத்தை ஒழுங்கா கொடுடா என்று கேட்டதாகவும், அப்போது தானும் சண்டையை விலக்கி விட்டதாகவும் தன் பேச்சை யாரும் கேட்காமல் நீ உயிரோடு இருக்கும் வரை பணத்தை தரமாட்டாய் என்று ஈஸ்வரன் சொல்லி வீட்டிற்குவெளியே ஓடி போய்வெளியில் கிடந்த ஒரு பெரிய கல்லை எடுத்து வந்த சென்னிமலையின் உச்சந்தலையில் அடித்ததாகவும் அதே மாதிரி சந்திரனும் வெளியில் ஓடி போய் ஒரு பெரிய கல்லை எடுத்து வந்து சென்னிமலையின் இடது பக்க தலையில் ஓங்கி குத்தியதாகவும் சென்னிமலையை திமிர விடாமல் பழனியப்பன் பிடித்து கொண்டதாகவும் அதனால் சென்னிமலை பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு பேச்சு மூச்சு இல்லாமல்இறந்துவிட்டதாகவும் இதுகுறித்து இரும்பாலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் போலிசார் சம்பவ இடம் வந்த பார்வையிட்டு சென்னிமலையின் பிரேதத்தை சேலம் அரசு மருத்துவமனைக்குஅனுப்பி வைத்ததாகவும், மறுநாள் போலிசார் தன்னை சேலம்அரசு மருத்துவமனை முன்பு சவக்கிடங்கில் விசாரித்ததாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் என் மகன்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம்

சொல்கிறேன் என்றால்  சரியல்ல.

குறுக்கு விசாரணை ( எதிரிகள் தரப்பில்)

இல்லை.

Sd/- Kuppayee Sd/- III ADJ Salem.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No. 43 /2017

Deposition of Witness for Prosecution PW-2

Father's Name :சேகர்
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of Sep– 2019.

முதல் விசாரணை:-

நான் தற்போது சேலம் திருமலைகிரி மொட்டையன் தெருவில் வசிக்கிறேன். நான் கொத்து வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். இறந்த சென்னிமலையை தெரியும். எதிரிகளையும் தெரியும். சுமார் 3 வருடத்திற்குமுன்பு ஒரு நாள் காலையில் நான் கடைக்குசென்ற போது அ.சா.1 ன் வீட்டிற்கு முன்பாக போலிசார் நின்று விசாரித்து கொண்டிருந்தார்கள். சென்னிமலை இறந்தது எனக்குதெரியாது. மேலே கூறியவாறு நின்று கொண்டிருந்த போலிசார் என்னை அழைத்து வழக்கு சம்பவம் தெரியுமா என்று கேட்டார்கள். தெரியாது என்று சொன்னேன். பின்னர் ஒரு எழுதப்பட்ட தாளில் போலிசார் கையெழுத்து கேட்டார்கள். போட்டு கொடுத்தேன். அது எதற்காக என்று எனக்குதெரியாது.என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து என்னடையதுதான். சாட்சியின் அந்த பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 2.என்னிடம் காட்டப்படும் கைப்பற்றிய மகஜரில் உள்ள கையெழுத்தும் என்னுடையதுதான். சாட்சியின் அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 3. போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரியதால் அவ்வாறே அனுமதிக்கப்பட்டது. )

அ.த.வ.கு.வி.

கடந்த 5.1.2016 ம் அதிகாலை 1-00 மணியளவில் தங்கள் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள அ.சா.1 வீட்டிற்கு தானும் தன் ஊரை சேர்ந்த பெரியசாமி மகன் ஏழுமலையும்இறந்த சென்னிமலையின் பிரேதத்தை பார்க்க போனதாகவும், அப்போது இரும்பாலை போலிசார் சென்னிமலையை கொலைசெய்தது சம்மந்தமாக வழக்கு சம்பவ இடத்தை பார்த்து எழுதிக்கொண்டு அதில் எங்கள் இருவரையும் சாட்சி கையெழுத்துபோடும்படி கேட்டதின்பேரில் நாங்கள் இருவரும் அதில் கையெழுத்து செய்ததாகவும் பின்னிட்டு எங்கள் இருவர் முன்னிலையிலும் அதிகாலை 2 மணியளவில் சம்பவ இடத்தில் பெயர்த்து எடுக்கப்பட்டஇரத்தக்கறை படிந்த சிமெண்ட் காரை சிறிதளவு,சம்பவஇடத்தில் பெயர்தெடுக்கப்பட்ட இரத்தக்கறை படியாத சிமெண்ட் காரை சிறிதளவு, சம்பவ இடத்திலிருந்து இரத்தக்கறை படிந்த பெரிய கல் இரண்டு, இரத்தக்கறை படிந்த டி.வி. கேபிள் ஒயர் ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றியதாகவும் மேற்படி மகஜரிலும் நாங்கள் இருவரும் சாட்சிகளாக கையெழுத்துசெய்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் உள்ளூர்காரர்கள் என்பதால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)

மேற்கூறிய பேப்பர்களில் நாங்கள் கையெழுத்து போட்ட போது காலை 8-00 மணியிருக்கும்.

மறு விசாரணை..இல்லை.

Sd/- Sekar Sd/- III ADJ Salem.

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No. 460 /2016

Deposition of Witness for Prosecution PW-1

Father's Name :பரமசிவம்
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of Sep– 2019.

முதல் விசாரணை:-

நான் கன்னங்குறிச்சி 1 வது வார்டு தோப்புக்காட்டில் குடியிருக்கிறேன். நான் தங்கம் காப்பி க்யூரிங் ஒர்க்ஸில் மெக்கானிக்காக வேலை பார்க்கிறேன். எதிரிகளை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு 18-3-2016 அன்று காலை 11 மணிக்கு எனக்கு சொந்தமான நிலத்தில் மின்சார கம்பம் நட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ஆறுமுகம், பெருமாள், தமிழரசி, ராஜ்குமார் ஆகியோர் வந்து எங்கள் நிலத்தில் எவ்வாறு கம்பம் நடலாம் என்று வாய் தகராறு செய்துவிட்டு சென்று விட்டார்கள். பின்னர் நான் வேலைக்குசென்றுவிட்டேன். பின்னர் அன்றுஇரவு சுமார். 10-30 மணியளவில் நானும் என் மனைவியும் வீட்டிலிருந்தோம். என் மகன் தமிழ்ச்செல்வன், மகள் ஆகியோர் இருந்தார்கள். அப்போது என் வீட்டிற்கு முன்பாக வாடா தேவடியா பையா கண்டார ஓழி பையா வெளியில் வாடா அல்லது நாங்கள் உள்ளே வரட்டுமா என்று வெங்கடேஷ், உள்ளிட்ட எதிரிகள் அனைவரும சொன்னார்கள் அப்போது நான் வெளியே வந்து பார்த்தேன். அப்போது எதிரிகள் அனைவரும் செங்கவல்,தடி ஆகிவற்றால் என்னைகையில் அடித்தார். அப்போது வெங்கடேஷ் கையில் கத்தி வைத்திருந்தார். அந்த கத்தியால் வெங்கடேஷ் என்னை குத்த வந்தார். நான் தடுத்தேன். அப்போது எனது வலது

கையில் குத்து பட்டது. பின்னர் எனது மகன் தமிழ்ச்செல்வன் தடுக்க வந்தான். அப்போது எதிரி சந்தோஷ்குமார் எனது மகனை செங்கல்லால் மண்டையில் ஓங்கி அடித்தார். என் மகனுக்கு இடது காதில் இரத்தம் வந்தது. என் வீட்டிற்கு முன்பாக நின்று கொண்டிருந்த மாருதி 800 காரை காரின் முன்புற கண்ணாடியை வலது புற டோர் ஆகியவற்றை செங்கல்லால் அடித்து சேதப்படுத்தினார்கள். பின்னர் எங்கள் வீட்டு முன்புற ஜன்னல் கண்ணாடி, அங்கிருந்த டேபிள், சேர் ஆகியவற்றை அடித்து சேதப்படுத்தினார்கள். இந்த வீட்டில் குடியிருந்தால் உன்னை கொலை செய்யாமல் விடமாட்டோம் என்று எதிரிகள் அனைவரும்சொன்னார்கள். பிறகு என் அண்ணன் மகன் சதிஷ்குமார் வந்து காயம்பட்ட என்னையும் என் மகனையும் சேலம் அரசுமருத்துவமனைக்கு கூட்டி சென்றார். பின்னர் போலிசார் ஒருவர் வந்து என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார். அந்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்து போட்டேன். போலிசார்விசாரித்த சமயத்தில் சேலம் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக இருந்தேன். என்னால் கொடுக்கப்பட்ட புகார் வாக்குமூலம்தான் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ1. எதிரி வெங்கடேஷ் என்னை கத்தியால் குத்திய கத்தியை பார்த்தால் அடையாளம்சொல்வேன். என்னிடம் காட்டப்படும் கத்திதான் வெங்கடேஷ் சம்பவ சமயத்தில் பயன்படுத்தியதாகும். அது சா.பொ.1. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை ( எதிரிகள் தரப்பில்)

இந்த வழக்கில் 5 வது எதிரி சுந்தரம் எனது உடன்பிறந்த சகோதரர். 1, 6 எதிரிகள் 5 வது எதிரியின் மகன் மற்றும் மனைவி ஆவார்கள். 4 வது எதிரி ராஜ்குமார் என் சித்தப்பா மகன். 2 வது எதிரி 4 வது எதிரியின் மகன். 7 வது எதிரி 4 வது எதிரியின் மனைவி. எதிரிகள் அனைவரும் எனக்கு நெருங்கிய உறவினர்கள். எதிரிகளின் உறவு முறை குறித்து போலிசார் மருத்துவமனையில் என்னை விசாரித்த போது நான் சொல்லவில்லை. போலிசார் என்னை மருத்துவமனையில் வைத்து விசாரித்த போது எனக்கு அருகில் யாரும் இல்லை. நான் மட்டும்தான் இருந்தேன். போலிசார் என்னை மருத்துவமனையில் 19-3-2016 அதிகாலை 5 மணியளவில் விசாரித்தார்கள். அதற்கு பின்னர் என்னை மீண்டும் விசாரித்தார்கள். 19-3-2016 மதியம் 1.30 மணியளவில் ஆய்வாளர் என்னை விசாரித்தார். மின் கம்பம் நடுவது சம்மந்தமாக தமிழ்ச்செல்வி என்பவர் என் மீது இதே காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்து அது நிலுவையில் இருப்பதாக சொல்வது சரிதான். அந்த புகார் 19-3-2016 காலை 11-00 மணிக்கு சம்பவம் நடந்ததாக கொடுக்கப்பட்டுள்ளது. அந்த குற்ற வழக்கு சேலம் கூடுதல் மகிளா நீதிமனறத்தில் எனக்கும் என் மனைவிக்கும் எதிராக நடைபெற்று வருகிறது. அந்த வழக்கில் நானும் என் மனைவியும் சேர்ந்து செங்கல்லால் தமிழ்ச்செல்வியின் தலையில் தாக்கியதாக குற்றம்

சுமத்தப்பட்டிருப்பதாக சொல்வது சரிதான். ஆனால் அது உண்மையில்லை. அந்த வழக்கின் சட்ட பிரிவுகள் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இரவு 10-30 மணியளவில் நாங்கள் எங்கள் வீட்டை தாழிட்டுகொண்டு இருந்தோம்.எதிரிகள் சத்தம் போட்டு திட்டியதை கேட்டுதான் நான் வெளியில் வந்து பார்த்தேன். குறிப்பிட்டு கெட்ட வார்த்தையால் யார் திட்டினார்கள் என்று உங்களால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. வெங்கடேஷ்தான் திட்டினார். எதிரிகள் ஒன்றாக சேர்ந்து வந்தார்களா தனித்தனியாக வந்தார்களா என்பது எனக்கு தெரியாது என்பது சரியல்ல. தெரியும். முதலில் எதிரிவெங்கடேசன் வந்து திட்டினார். அப்போது நான் வெளியே வந்தேன். அந்த சமயத்தில் மற்ற எதிரிகளும் வந்து விட்டார்கள். 1 ,4 எதிரிகள் தனித்தனி குடும்பமாகஇருக்கிறார்கள் என்பது சரிதான். எங்கள் வீட்டிற்கு எதிரில் தமிழரசி என்ற பெயரில் யாரும் இல்லை. தமிழ்ச்செல்வி என்பவரின் வீடு என் வீட்டிற்கு மேற்குபுறமாக சுமார் 75 அடி துூரத்தில் இருக்கிறது. மேற்படி தமிழ்ச்செல்வியின்உடன் பிறந்த சகோதரர்தான் 4 வது எதிரி ராஜ்குமார் என்பது சரிதான். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் என் வீட்டிற்கு எதிரில் வேலைக்காக 20,30 செங்கல் வைத்திருந்தேன். என்னை தாக்க பயன்படுத்திய செங்கல் எங்கள் வீட்டின் என்னால் வைக்கப்பட்டிருந்ததாகும். எங்கள் வீட்டின் கதவிலிருந்து சுமார் 20 அடி துூரத்தில் நான் செங்கல்லை குவித்து வைத்திருந்தேன். எதிரிகள் யாரும் என்னை கட்டையால் தாக்கவில்லை. என்னை தாக்கிய கல் செங்கல்தான் . செங்கல்லால் தாக்கியதால் எனது இடது கையில் காயம் ஏற்பட்டது. என்னை எதிரி ராஜ்குமார் செங்கல்லால் தாக்கி காயப்படுத்தினார். ராஜ்குமார் என்னை எவ்வளவு துூரத்தில் இருந்து தாக்கினார் என்றால் பக்கத்திலிருந்து தாக்கினார் துூரத்திலிருந்து எரியவில்லை. நான் சிகிச்சைக்கு சேர்ந்த போது செங்கல்லால் தாக்கியதில் இடது கையில் காயம் என்று நான் சொல்லவில்லை. எனக்கு அதில் வெளிக்காயங்கள் ஏற்படவில்லை. சிராய்ப்புக்காயம்தான். என்னால் சொல்லப்படுவதுபோல் செங்கல்லால் எனது இடது கையில் காயம் எதுவும் ஏற்படவில்லையென்றும் வழக்கிற்காக அவ்வாறு காயம் ஏற்பட்டதாக பொய்ய சொல்கிறேன் என்பது சரியல்ல. என் வீட்டின் ஜன்னல் மற்றும் காரின் கதவுகளை சேதப்படுத்திய செங்கல்லும் எங்கள் வீட்டில் கிடந்த செங்கல் ஆகும். காரை சேதப்படுத்திய செங்கல் காருக்கு வெளியே வந்து கிடந்தது. கண்ணாடி உடையவில்லை.விரிசல் மட்டும் ஏற்பட்டது. காரின் வலது புறம் தாக்க பயன்படுத்திய செங்கல் காருக்கு வெளியில் வலதுபுறம் கிடந்தது. அது அரை, கால், மற்றும் துாளாக கீழே கிடந்தது. என் வீட்டிலிருந்துசேலம் அரசு மருத்தவமனைக்கு செல்லும் வழியில்தான் கன்னங்குறிச்சி காவல் நிலையம் இருக்கிறது. சிகிச்சைக்காக செல்லும்போது மேற்படி காவல் நிலையம் சென்று சம்பவத்தை சொல்லவில்லை. என்னையும் என் மகனையும்

மருத்துவமனைக்கு அழைத்து சென்ற சதிஷ்குமார் எனது மற்றொரு அண்ணன் மகன். சதிஷ்குமார் எங்களை இரு சக்கர வாகனத்தில் கூட்டிச் சென்றார். இந்த வழக்கு சம்மந்தமாக என் மகளையோ ,மனைவியையோ போலிசார் விசாரிக்கவில்லை. கார் கண்ணாடியை 2 வது எதிரி எறிந்த கல் சேதப்படுத்தியது. வெங்கடேஷ் காரின் டோர் கண்ணாடியை சேதப்படுத்தினார். இந்த வழக்கில் ஒரு சாட்சியாக அழகேசன், எனது மற்றொரு அண்ணன். அழகேசன், கந்தசாமி, கணேசன், ஆகியோர் எனது உடன்பிறந்த சகோதரர்கள்.சாட்சி கேசவன் எனது அண்ணன் கந்தசாமியின் மகன்.சாட்சி பரசுராமன் என்பவரும் எனது உறவினர்தான். இவ்வழக்கின் 5ம் எதிரி சுந்தரம் எங்களுக்கு எதிராக ஒரு பாக வழக்கு தாக்கல் செய்ததாக சொல்வது சரிதான். மேற்படி சுந்தரம் பாக வழக்கு தாக்கல் செய்ததால் நானும் எனது மற்ற சகோதரர்களும் அவர் மீது பகைமை பாராட்டி வந்ததாக சொல்வது சரியல்ல. மேற்படி தமிழ்ச்செல்வி எங்களுக்கு எதிராக ஒரு குற்ற வழக்கை கொடுத்திருப்பதால் அதிலிருந்து தப்பிக்கும்நோக்கத்தில் இந்த வழக்கை பொய்யாக கொடுத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரிகள் யாரும் என்னால் சொல்லப்படும் நேரத்தில் அந்த இடத்திற்கு வரவோ எங்களை தாக்கவோ கிடையாது என்பது சரியல்ல. கத்தியால் ஏற்பட்டதாக சொல்லப்படும் காயத்தை வழக்கிற்கு வலு சேர்க்கும் நோக்கத்தில் நானாக ஏற்படுத்திக்கொண்டிருப்பதாக சொல்வது சரியல்ல. தமிழ்ச்செல்வி வழக்கினை வாபஸ்பெற வைக்கும் நோக்கத்தில் நானே எங்கள் வீட்டில் கிடந்த செங்கல்லை எடுத்துமேலே கூறியவாறு சேதங்களை ஏற்படுத்திக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக பழி சுமத்துகிறேன் என்பது சரியல்ல. அவ்வாறு நானாக காரையும் வீட்டின் ஜன்னலையும் செங்கல்லால் சேதப்படுத்தியதாகவும்அப்போது குறுக்கே வந்த எனது மகனுக்கும் காயம் ஏற்பட்டதாகவும் சொல்வது சரியல்ல. உண்மையில் என்னால்சொல்லப்படுவதுபோல் ஒரு சம்பவம் நடந்திருந்தால் மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றும் உண்மையில் அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறாததால் தான் நான் நேரடியாக மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்திருப்பதாக சொல்வது சரியல்ல. எதிரிகள் சுந்தரம் வெங்கடேசன், பாக்கியம், ஆகியோர்களுக்கும், கம்பம் நடப்பட்டதாக சொல்லப்படும் இடத்திற்கும் சம்மந்தம் இல்லையென்றால் அவர்கள் அந்த இடம் அவர்களுக்கு சொந்தமானது என்று கூறி வருகிறார்கள். என் வீட்டிற்கு எதிரில் உள்ள நிலம் எதிரிகளுக்குசொந்தமானது என்றும் அதனை அபகரிக்கும் நோக்கத்தில் பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை.. இல்லை.

Sd/- Paramasivam Sd/- III ADJ Salem.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

Calendar :
Miscellaneous :
Preliminary Register:
Sessions : SC.No.460/2016
Deposition of Witness for Prosecution PW-2

Father's Name :திரு.சதிஷ்குமார்
Village :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of September–2019.

முதல் விசாரணை:-

நான் கன்னங்குறிச்சி 1 வது வார்டு தோப்புக்காட்டில் குடியிருக்கிறேன். நான் டெக்ஸ்டைல்ஸ் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என் சித்தப்பா. எதிரிகளை தெரியும். 18-3-2016 அன்று காலை 11-00 மணியளவில் அ.சா.1 ன் நிலத்தில் மின்சார கம்பம் நடுவதற்கு வந்திருந்தார்கள் அந்த சமயத்தில் அங்கு வந்த பெருமாள், ஆறுமுகம், ராஜ்குமார் மற்றும் சிலர் அங்கு கம்பம் நடக்கூடாது என்று சத்தம் போட்டு விட்டு போய் விட்டார்கள். அன்று இரவு 10-45 மணியளவில் எதிரிகள் அ.சா.1 ன் வீட்டிற்கு வந்து கண்டார ஒழி தேவடியா பையா வெளியே வாடா என்று திட்டினார்கள். அப்போது அ.சா.1 வீட்டிற்குள் இருந்து வெளியே வந்து பார்த்தார். அப்போது வெங்கடேஷ் மறைத்து வைத்திருந்த கத்தியால் அ.சா.1 ன் கையில் குத்தி விட்டார். எதிரி ராஜ்குமார் செங்கல்லால் அ.ச.1 ன் இடது கையில் தாக்கினார். 2 வது எதிரி ஆசை என்கிற சந்தோஷ் குமார் தமிழ்ச்செல்வனை பின் மண்டையில் செங்கல்லால் தாக்கினார். அதில் தமிழ்ச்செல்வனுக்கு பின்மண்டையிலும், காதிலும் இரத்தம் வந்தது. தமிழ்ச்செல்வன் மயங்கி விழுந்து விட்டான். பின்னர் எதிரிகளும் அவர்களுடன் வந்த அடையாளம் தெரியாத வேறு சிலரும் செங்கல்லால் அங்கு நிறுத்தியிருந்த காரின் முன்புற கண்ணாடி மற்றும் வலது புற டோர் கண்ணாடி ஆகியவற்றையும், வீட்டின் ஜன்னல் கண்ணாடியையும் செங்கல்லால் அடித்து சேதப்படுத்தினார்கள். மேலும் நீ வீட்டில் இருந்தால் உன்னை

கொன்று விடுவேன் என்று அ.,சா.,1 ஐ பார்த்து மிரட்டி விட்டு அங்கிருந்து ஓடி விட்டார்கள். பின்னர் தமிழ்செல்வனையும், பரமசிவத்தையும் நான் இரு சக்கர வாகனத்தில் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தேன். இது குறித்து அ.சா.,1 புகார் நடவடிக்கை மேற்கொண்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை( எதிரிகள் தரப்பில்)

எதிரிகள் அனைவரும் எனக்கு நெருங்கிய உறவினர்கள். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் சுமார் 6,7 ஆண்டுகளாக பேச்சு வார்த்தை இல்லை என்பது சரிதான். சம்பவ சமயத்தில் நான் அ.சா.1 ன் வீட்டில்தான் இருந்தேன். உண்மையில் நான் சம்பவ சமயத்தில் அ.சா.1 ன் வீட்டில் இல்லை என்றும் அதனால்தான் நான் அ.,சா.1 ன் வீட்டில் இருந்ததாக அ .சா.1 அவரது விசாரணையில் சொல்லவில்லையென்பது சரியல்ல. போலிசார் என்னை விசாரித்த போது சம்பவ சமயத்தில் நான் அ.சா.1 ன் வீட்டில் இருந்ததாக சொன்னேன். சாட்சி தமிழ்ச்செல்வன் அ.சா.1 ன் மகன். எனது உடன்பிறந்த சகோதரர் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் அங்கு மின் விளக்குகள் இல்லை என்பது சரியல்ல. அ.சா.1 ன் வீட்டில் மின் விளக்கு எரிந்தது. அ.சா.1 ன் வீட்டில் சம்பவ சமயத்தில் மின் விளக்கு எரிந்துகொண்டிருந்ததாக போலிசார் விசாரித்த போது சொல்லவில்லை. எனது வீடு அ.சா.1 ன் வீட்டிலிருந்து ஒரு காடு தள்ளி இருக்கிறது. சம்பவ சமயத்தில் எனது தகப்பனார் பரமசிவம் வீடு அருகில் இல்லை. அவர் மறுநாள் காலையில் தான் வந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சம்பவ சமயத்தில் நானும், அ.சா.1 ன் குடும்பத்தினர் மட்டும்தான் இருந்தீர்கள் என்றால் இல்லை எங்களுடன் பார்த்திபன் என்ற என் நண்பரும் இருந்தார். எதிரிகளுடன் நிறைய பேர் வந்திருந்தார்கள். எதிரிகளுடன் வந்தவர்கள் சுமார் 10 பேர் இருப்பார்களா என்றால் சரியாக தெரியவில்லை. எதிரிகளுடன் வந்தவர்களும் செங்கல்லால் மேலே கூறியவாறு தாக்கினார்கள். எதிரிகளுடன் வந்தவர்களும் தாக்கியதல் தான் கார் கண்ணாடி உள்ளிட்ட பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டதா என்றால் எதிரிகள் தாக்கியதால் தான் சேதம் ஏற்பட்டது. மற்றவர்கள் தாக்கியதை பார்க்கவில்லை. எந்த எதிரி தாக்கியதில் கார் மற்றும் வீடு சேதமானது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் எல்லா எதிரிகளும் சேர்ந்து தாக்கினார்கள். காருக்கு எத்தனை செங்கல்லால் சேதம் ஏற்பட்டது என்றால் நிறைய செங்கல்லால் சேதம் ஏற்பட்டது. நிறைய பேர் வந்திருந்ததால் யார் யார் கற்களால் தாக்கினார்கள் என்று குறிப்பாக சொல்ல முடியாது என்றால் சரிதான். காயம்பட்ட நபர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது மருத்துவரிடம் நான் தகவல் சொல்லவில்லை. காயம்பட்டவர்கள்தான் சொன்னார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து சேலம் அரசுமருத்துவமனை 12 கிமீ தூரம். அவ்வாறு

செல்லும் வழியில்தான் கன்னங்குறிச்சி காவல் நிலையம் இருப்பதாக சொல்வது சரிதான் . அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் கன்னங்குறிச்சி காவல் நிலையம் சென்று நாங்கள் யாரும் புகார் கொடுக்கவில்லை. அ.சா.1ன் வீட்டிலிருந்து சேலம் அரசு மருத்துவமனை செல்லும் வழியில் இடையில் கோரிமேடு, அஸ்தம்பட்டி, காந்திரோடு ஆகிய பகுதிகளில் 24 மணிநேரமும் செயல்படக்கூடிய மருத்துவமனைகள் இருப்பதாக சொல்வது சரிதான். அவ்வாறு செல்லும வழியில் உள்ள மருத்துவமனைகளில் காயம்பட்டவர்களை நான் சிகிச்சைக்கு சேர்க்கவில்லை. என்னால் சொல்லப்படுவது போல் தமிழ்ச்செல்வனுக்கு தலையிலும் காதிலும் உண்மையில் இரத்தம் வந்திருந்தால் அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியில் இருக்கும் தனியார் மருத்துவமனைகளில் அவரை சிசிச்சைக்கு சேர்த்திருப்பேன் என்றும் என்னால் சொல்லப்படுவது போல் காயம் ஏற்படவில்லையென்பதால்தான் அவர்களை அழைத்துக் கொண்டு சேலம் அரசு மருத்துவமனைக்கு நான் சென்றதாக சொல்வது சரியல்ல.மாருதி 800 என்பது 1999 மாடல் என்பது எனக்கு தெரியாது. அந்த வாகனத்தை நான் சம்பவத்திற்கு முன்பாக ஓட்டியிருக்கிறேன். அதற்கு பின்பு ஓட்டவில்லை. போலிசார் என்னை இவ்வழக்கு சம்மந்தமாக 19ம்தேதி காலையில் 11-00 மணியளவில் விசாரித்தார்கள். என்னை போலிசார் விசாரிப்பதற்கு முன்பாகவே எதிரிகளை போலிசார் கைது செய்து காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று விட்டதாக சொல்வது எனக்கு தெரியாது. நான் குடியிருக்கும் மிக அருகில்தான் எதிரிகளும் குடியிருக்கிறார்கள். எதிரிகளை போலிசார் எப்போது கைது செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னால் சொல்லப்படுவது போல் அ.சா.1க்கும் அவரது மகனுக்கும் எதிரிகளால் காயம் ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்பது சரியல்ல. எதிரிகளால் மேற்படி காருக்கும் அ.சா.1ன் வீட்டிற்கும் சேதம் ஏற்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னால் சொல்லப்படும் நேரத்தில் எதிரிகள் எந்தவித குற்ற நடவடிக்கையிலும் ஈடுபடவில்லையென்பது சரியல்ல. மின் கம்பத்தை நடக்கூடாது என்று தகராறு செய்த ஆறுமுகம், பெருமாள் ஆகியோர் இந்த வழக்கில் எதிரிகள் இல்லை. மேற்படி பெருமாள்,ஆறுமுகம் ஆகியோர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரவில்லை என்றால் நிறைய பேர் வந்திருந்ததால் அவர்கள் வந்தார்களா என்பதை நான் பார்க்கவில்லை. நிறைய பேர் வந்ததாக சொல்லப்படும் நிலையில் எதிரிகளை மட்டும் நான் குறிப்பாக சொல்வதற்கு காரணம் என் சித்தப்பா அ.சா.1 கேட்டுக்கொண்டதன்பேரில் எதிரிகளை மட்டும் குறிப்பாக சம்பவத்தை தொடர்பு படுத்தி பொய்யாக சொல்கிறேன் என்பது சரியல்ல. அ.சா.1 மீது தமிழ்ச்செல்வி கொடுத்திருந்த குற்ற வழக்கிற்கு எதிராக அ.சா.1 எடுத்த பொய் புகார் நடவடிக்கைக்கு ஆதரவாக அ.சா.1 கேட்டுக்கொண்டதன்பேரில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால்

சரியல்ல. எதிரிகளுக்கும் எங்களுக்கும் 6,7 வருடங்களாக பேச்சு வார்த்தை இல்லை என்ற காரணத்தாலும் அதன் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி பிரபாகரன் த/பெ ராமமூர்த்தி எனது நண்பர். எனது உதவியுடன் எனது நண்பர் பிரபாகரன் மூலம் உண்மைக்கு புறம்பாக சேத மதிப்பு குறித்த சான்று பெற்று தாக்கல் செய்திருப்பதாக சொல்வது சரியல்ல.

மறு விசாரணை.. இல்லை.

Sd/- Sathishkumar Sd/- III ADJ Salem.

(குறுக்கு விசாரணையை நிறுத்தி வைக்க கோரி மனு தாக்கல் செய்யப்பட்டு இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு , மனு தள்ளுபடி செய்யப்பட்டு மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டது)

குறுக்கு விசாரணை..இல்லை.

3-9-2019

S.C. /20

PW

அ.சா. சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

குறுக்கு விசாரணை..

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM

OS. /20

Deposition of Dw/PW - Witness of Plaintiff Petition/Defendant/ Respondent

Solemnly affirmed by Thiru.V.Rajasekaran Assistant of this Court in accordance with provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of September– 2019.

| | |
|---|---|
| Name | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

வா.சா. சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை..

முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

-7-2019

ஓ எஸ் /20

வா.சா. திரு.

வா.சா. சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு தரப்பில் குறுக்கு விசாரணை..

குறுக்கு விசாரணை..

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM

OS.      /20

Deposition of Dw/PW - Witness of Plaintiff Petition/Defendant/ Respondent

Solemnly affirmed by Thiru.V.Rajasekaran Assistant of this Court in accordance

with provisions of Evidence OATH Act X 1969 on3rd day of September– 2019.

| | |
|---|---|
| Name | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

வா.சா.      சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை..

முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

-7-2019
ஓ எஸ்      /20
வா.சா. திரு.

வா.சா.      சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு        தரப்பில் குறுக்கு விசாரணை..
குறுக்கு விசாரணை..

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM

OS.      /20

Deposition of Dw/PW - Witness of Plaintiff Petition/Defendant/ Respondent

Solemnly affirmed by Thiru.V.Rajasekaran Assistant of this Court in accordance

with provisions of Evidence OATH Act X 1969 o 3rd day of September– 2019.

| | |
|---|---|
| Name | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

வா.சா.      சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை..

முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

-9-2019
ஓ எஸ்      /20
வா.சா. திரு.

வா.சா.      சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு      தரப்பில் குறுக்கு விசாரணை..
குறுக்கு விசாரணை..

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM

MCOP No., /20

Deposition of Rw/PW - 1 Witness of Plaintiff Petition/ Defendant/ Respondent Solemnly affirmed by Thiru V. Rajasekaran, Assistant of this Court in accordance with provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of September – 2019.

| | |
|---|---|
| Name | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

ம.சா. சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை..

முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM

MCOP No., /20

Deposition of Rw/PW - 1 Witness of Plaintiff Petition/ Defendant/ Respondent Solemnly affirmed by Thiru V. Rajasekaran, Assistant of this Court in accordance with provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of September – 2019.

| | |
|---|---|
| Name | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

ம.சா. சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை..

முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

IN THE COURT OF THE SPECIAL JUDGE FOR EC ACT CASES , SALEM

MCOP No. /20

Deposition of PW - 1 Witness of Plaintiff Petition/ Defendant/ Respondent Solemnly affirmed by Tmt. of this Court in accordance with provisions of Evidence OATH Act X 1969 on 3rd day of September – 2019.

| | |
|---|---|
| Name | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

ம.சா. சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை..

முதல் விசாரணை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன்.

IN THE COURT OF THE SPECIAL DISTRICT JUDGE FOR E.C. ACT CASES , SALEM

CC No. /

Deposition of PW- solemnly affirmed by Tmt. of this Court, in accordance with the provisions of Oath Act X of 1873, this the 3rd day of September -2019.

| | |
|---|---|
| Name | Calling |
| Father's Name | Religion |
| Village | Age |
| Taluk | |

ம.சா. சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

முதல் விசாரணை..